செ.வெ.எண்:342 நாள்:29.05.2018

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வருவாய்த் தீர்வாயக் கணக்கு முடிப்பு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் / வருவாய்த் தீர்வாய அலுவலர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் 14 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்டம் , நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் 1427ம் பசலி ஆண்டு வருவாயத் தீர்வாயக் கணக்கு முடிப்பு நிகழ்ச்சி இன்று (29.05.2018) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் / நாங்குநேரி வட்ட வருவாய்த் தீர்வாய அலுவலர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு விஜயநாராயணம் குறுவட்டம் பாப்பான்குளம், இலங்குளம், சடையநேரி, விஜயநாராயணம் பகுதி–1 முதல் பகுதி–4 வரை, இட்டமொழி ஆகிய 8 வருவாய் கிராமங்களை சேர்ந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொண்டு பதில்களை வழங்க வேண்டுமென உத்தரவிட்டார். மேலும், இப்பகுதி கிராம கணக்கு புத்தகங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 4 நபர்களுக்கு ரூ.1000/– மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவினையும், 10 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (பொது) திரு.சிவக்குமார், நாங்குநேரி வட்டாட்சியர் திரு.வாக்கீஷ், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் திரு.சுப்புராயன், துணை வட்டாட்சியர்கள் திரு.பாலசுப்பிரமணி, திரு.குமார், திருமதி.முருகேஸ்வரி மற்றும் அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.